பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை 04.06.2024 கதிர் 209

## இனி அது ரகசியம் அல்ல!

இன்றைக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அரசியல் முன்னகர்வுகள் எதுவும் இல்லை. ஆனால் அரசியல் கிசு கிசு இருக்கின்றது. நேற்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தொகுதியினருக்கு இடையில் நடந்த கூட்டம் அடிதடியில் முடிந்திருக்கிறது என்று தகவல்.

இந்தக் கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டது, யார் அதைக் கூட்டினார்கள் என்றெல்லாம் உடனடியாக அறிய முடியவில்லை. ஆனால் மலையகத்தைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையில் நடந்த அடிதடியில் ஒருவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார் என்று மட்டும் அறிய முடிந்தது.

ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அப்போது மலையகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரிடையே கடுமையான கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. ☞2

# பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தை எதிர்த்து ஐ.ம.ச. நீதிமன்றத்தை நாடும்

### ஹர்ஷ டி சில்வா தலைமையில் வழக்கு தாக்கலாகும்

**ஆளும் தரப்பு முன்வைக்கவுள்ள பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தைநாடுவதுஎன்று ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.**

**பொருளாதார பரிமாற்றச் சட்டத்திற்குஆதரவுவழங்குங்கள்என்றுஅனைத்துக்கட்சிகளிடத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில்** ☞2

## 250 புதிய பாலங்கள் ஆளும் தரப்பு திட்டம்

தேசிய மட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பயனை கிராமப்புற மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில்வீதிக்கட்டமைப்பைமேம்படுத்தி நாடுமுழுவதும் 250 புதியபாலங்களை அமைக்கத்திட்டமிட்டுள்ளதாகஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகள் காலப் பகுதியில் நெதர்லாந்து ஜென்சன் பிரிஜிங்நிறுவனத்தினால்இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 750 கிராமிய பாலங்களை வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டதை முன்னிட்டு நேற்றுகொழும்புஷங்ரிலாஹோட்டலில் இடம்பெற்றநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞2

### களனிப் பள்ளத்தாக்கில்

## ஆக்கிரமிப்புக்களை அகற்ற ஜனாதிபதி ரணில் உத்தரவு

களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும், மழைநீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும்புதிய கட்டுமானங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த ☞8

## 4 கங்கை கரைகளையொட்டி வெள்ள அபாய எச்சரிக்கை

நிலவும்சீரற்றவானிலை காரணமாக களனி, களு, கிங் மற்றும் நில்வலா கங்கைகளை சூழவுள்ள தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படிகளுகங்கையின் மேல்பகுதியில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், அடுத்த 48 மணித்தியாலங்களில் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல, நிவித்திகல, குருவிட்ட, அயகம, எலபாத்த, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் காணப்படுகிறது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, ஹொரணை, தொடங்கொட மற்றும் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ☞8

## தனது கருத்தை நியாயப்படுத்துகிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர்

ஜனாதிபதி தேர்தலையும் நாடாளுமன்ற தேர்தலையும் பிற்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பைநடத்தவேண்டும் என்ற தனது கருத்தினை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார நியாயப்படுத்தியுள்ளார்.

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பொதுவாக்கெடுப்பிற்கானஏற்பாடுகள்குறித்தே நான் கருத்து தெரிவித்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியமுக்கியத்துவம்வாய்ந்த எந்தவொரு விடயத்தையும் பொதுவாக்கெடுப்பின் மூலம் மக்களுக்கு சமர்ப்பிக்கும் அதிகாரத்தை வழங்கும் அரசமைப்பின்பிரிவுகள்குறித்தே நான் கருத்து தெரிவித்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு அந்த சர்வஜனவாக்கெடுப்பைநடத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாசவையும் ஜேவிபி தலைவரையும் ஏனையவர்களையும் இந்த விடயம் குறித்து அவர்களின் கருத்தை வெளியிடுமாறு மாத்திரமேநான் வேண்டுகோள் விடுத்தேன், பொருளாதார வீழ்ச்சியை தடுப்பதற்காக எதிர்கட்சிகள் ஒன்றிணைவதை விரும்புகின்றேன் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். எனினும் எந்த கட்சியும் தனது யோசனையை ஏற்கவில்லை என்கிற நிலையில் தமது கட்சியும் ஜனாதிபதி தேர்தலிற்குதயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 5 மாவட்டங்களில் மட்டுமே இன்று பாடசாலை விடுமுறை

### வடக்கு கிழக்கில் வழமைபோன்று நடக்கும்

நாட்டில் தற்போது நிலவும்சீரற்றகாலநிலை காரணமாகப் 5 மாவட்டங்களிலும் ஒரு கல்வி வலயத்திலும் உள்ளபாடசாலைகளுக்கு மட்டுமே இன்று செவ்வாய்க்கிழமை விடுமுறை வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டம் மற்றும் கேகாலை மாவட்டம் ஆகியவற்றில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை.

தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில்அனைத்துப்பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் ☞2

## சுற்றாடல் தின தேசிய விழா நிறுத்தம் அந்த நிதி வெள்ள உதவிப் பணிக்கு

### ஜனாதிபதியின் பணிப்பின் பேரில்

எதிர்வரும் ஜூன் 5 நடைபெறவிருந்த உலக சுற்றாடல் தினத்தின் தேசிய கொண்டாட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை வெள்ள உதவிப் பணிகளுக்குத் திரும்புமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிப்பதே உடனடித் தேவை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கபணிப்புரை விடுத்துள்ளார் என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்த போதே மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் ☞8

## ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்து முன்னணி எதையும் சாதிக்கவே முடியாது என்கிறார் சுரேஸ்

ஜனாதிபதித் தேர்தலைப்புறக்கணிப்பதால் எதனையும் சாதிக்க முடியாது, வெறுமனே துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு மட்டுமே வெளியிடலாம் என்று ஜனநாயகக்கூட்டணியின் இணைத் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதும் பகிஷ்கரிப்பு என்பதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவது போல்ஒன்றல்லஎனவும் தெரிவித்த அவர், யாழ். நகரில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய போது தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து ஒருபொது வேட்பாளரை நிறுத்தும் விடயம் முக்கியமான கட்டத்தை வந்து சேர்ந்திருக்கின்றது. ☞2

## அமைச்சர் விஜயதாசவுக்கு எதிரான நீதிமன்றத் தடை உத்தரவு நீடிப்பு

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி அணியால் தெரிவு செய்யப்பட்ட நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை ஜூன் 14ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த முறைப்பாடு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், இந்தமுறைப்பாடுதொடர்பான விசாரணை கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சாமரி வீரசூரியவிடம் ஒப்படைக்கப்படுமென மாவட்ட நீதிபதி தெரிவித்தார்.

அதனையடுத்து, குறித்த வழக்கு நீதிவான் ☞8

## கல்முனை விவகாரம் தொடர்பில் ரணிலைச் சந்திக்குமாம் ரெலோ

கல்முனை விவகாரம்சம்பந்தமாகஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும்சந்திப்பதற்கு முயற்சிகளை எடுக்கவுள்ளதாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

கல்முனைக்குநேற்று சென்றிருந்த அவர் கல்முனைவடக்குதமிழ் பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பான விடயத்திற்கு நீதி கோரி சுழற்சி முறையில் உண்ணாவிரதமிருக்கும் மக்களை நேரில் சந்தித்தார்.அதனைத்தொடர்ந்து கல்முனை பிரதேச செயலாளரையும்சந்தித்து உரையாடிய ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

# சம்பள வர்த்தமானிக்கு எதிராக உத்தரவிட நீதிமன்றம் மறுப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான வர்த்தமானியை அமுல்படுத்தப்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துவிட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் இதனை அறிவித்தது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித்த ராஜகருணா, தம்மிக்க கனேபொல ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவற்றதாக்கி, எழுத்தாணை கட்டளை பிறப்பிக்குமாறு கோரி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தன.

பெருந்தோட்ட நிறுவனங்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமெஸ் டி சில்வா மற்றும் தொழில் அமைச்சர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா ஆகியோர் இன்று மன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஆளும் தரப்பு எடுத்துள்ள தீர்மானத்தை செயற்படுத்தினால் தற்போது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் முழுமையாகச் செயலிழக்கும் நிலை உருவாகும் என மனுத்தாரர்கள் மன்றில் சுட்டிக்காட்டினர். பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடாமல் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமையால் அதனை செல்லுபடியற்றதாக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.ஏ.ஜயசுந்தர, தொழில் அமைச்சின் செயலாளர் எச்.ஜி.டபிள்யூ.குணவர்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 52 பேர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## இனி இது .....

இருவரும் வார்த்தைகளால் தீவிரமாக மோதிக்கொண்ட நிலையில், கூட்டம் முடிந்து வெளியேறியபோது அவர்களில் ஒருவர் மற்றவர் மீது திடீரெனப் பாய்ந்து தாக்கியுள்ளார். இதனால் இரத்தக்காயமடைந்த உறுப்பினர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டிருக்கின்றார்.

எந்த விடயம் தொடர்பில் இருவருக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது என்பதையும் உடனடியாக அறிய முடியவில்லை.

....................

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக சிவில் சமூகங்களின் கூட்டிணைவு என்கிற புதிய அமைப்பால் தொடங்கப்பட்ட முயற்சியின் அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதனாவது சங்கங்களாக மற்றும் பொது அமைப்புக்களாக உள்ளவற்றின் பிரதிநிதிகளை அழைத்து பொது வேட்பாளர் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள். பின்னர் அந்த அமைப்புக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளன என்ற தகவல்களும் கசிய விடப்படுகின்றன. எனினும் இந்தக் கலந்துரையாடல்கள் பெரிதும் ஒருவழியானவையாக, அதாவது, கூட்டிணைவைச் சேர்ந்தவர்கள் சொல்வதை மற்றவர்கள் கேட்டுவிட்டு எழுந்து செல்வதாகத்தான் இருக்கின்றது என்று மற்றைய தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

தமிழர்களை ஒற்றுமைப் படுத்துவது என்று முன்வைக்கப்படும் யோசனையை சந்திப்பில் கலந்துகொள்ளும் எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். தமிழர்கள் ஒற்றுமைப்பட்டால் அது ஓர் அரசியல் பலம் என்று எண்ணுவதால் அதனை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம், கூட்டிணைவினர் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்குச் சொல்லும் காரணங்களும் ஜனாதிபதித் தேர்தலைக் கையாளுதல் என்று அவர்கள் கூறும் விளக்கங்களும் தமக்குப் புரிபவையாக இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். அழைத்தார்கள் போய்ப் பேசினோம். எல்லோரும் ஒற்றுமைப்பட்டால் நல்லதுதானே என்கிற அளவில் தாம் தலையாட்டிவிட்டு வந்தோம் என்று அவர்களில் பலரும் தெரிவித்தனர். அதற்கு மேல் இந்த விடயத்தில் தாம் செய்வதற்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க பகிரங்கமாக கோரிக்கை விடுத்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த முடிவை எடுத்துள்ளது.

நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கிநிறுத்த மாற்று யோசனைகளை முன்வையுங்கள் அல்லது பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தை ஆதரியுங்கள் என்று ரணில் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் ஆளும் தரப்பால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள இந்தச் சட்டம் நாட்டுக்குப் மிகப் பெரும் ஆபத்து என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி, அதனை எதிர்த்து தாம் நீதிமன்றத்தை நாடுவது உறுதி என்று தெரிவித்துள்ளது.

பொருளாதார பரிமாற்றச் சட்டம் ஜூன் 22 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு அதனை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் சட்டமூ-லத்தை ஆராய்ந்த பின்னர் அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் இருப்பின் அது குறித்து சபாநாயகருக்கு அறிவிக்கும்.

## முன்னணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது கொள்கைரீதியாகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நிலையை ஏற்கனவே எடுத்திருந்தாலும் இந்தக் கூட்டணியில் இருக்கக்கூடிய ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற கட்சிகள் இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

மட்டக்களப்பில் ஒன்றுகூடிய ரெலோ உயர்மட்டக் குழு, பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தாங்களது முழு ஒத்துழைப்பையும் சகல தரப்புக்களுக்கும் வழங்குவதாக அறிவித்திருக்கின்றது.

அதேபோல் ஈபிஆர்எல்எவ் தனது அரசியல் பீடக் கூட்டத்தை கூட்டி இந்தப் பொது வேட்பாளர் என்ற விடத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், எங்களுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தமிழ் சிவில் அமைப்புகள், கட்சிகள் அனைத்தையும் இணைத்து இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்திருக்கின்றது.

இதைப் போலவே ஏனைய கட்சிகளும் தங்கள் கட்சிகளின் உயர் பீடங்களைக் கூட்டி தமது முடிவுகளை இன்னும் சில தினங்களில் வெளியிட இருக்கின்றார்கள்.

அந்த வகையில் பொது வேட்பாளர் என்ற விடயத்தைப் பற்றி இப்போது அரசியல் கட்சிகள் பலவும் ஆலோசித்து வருவதுடன் அவற்றை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் அரசுக் கட்சியும் இது தொடர்பில் விரைவில் ஒரு முடிவை எடுக்கவேண்டும். ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாண்டால் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம், தமிழ் மக்களுடைய எதிர்காலத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்து விரைவாக முடிவை எடுக்க வேண்டிய ஒரு பணி அவர்களுக்கு இருக்கின்றது. காலம் வரும்போது நாம் முடிவெடுப்போம் என்று சொல்வது தமிழர்களின் எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல.

மேலும், தமிழரசுக் கட்சியில் இருக்கக் கூடிய ஒரு சிலர் குறிப்பாக சிவஞானம் போன்றோர் ஒரு பொது வேட்பாளரை நாங்கள் தேடுகின்றபோதே இந்த விடயம் முடங்கிப் போய்விடும் என்றும், இந்த வேலைகள் எல்லாம் முடக்கப்பட்டுவிடும் என்றும், இது அடுத்த கட்டத்தை நோக்கி நகராது என்ற பாணியிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

உண்மையாகவே இந்த முயற்சி என்பது தோற்றுப் போக வேண்டும் என்று பல பேர் விரும்புகின்றார்கள். அதில் சீ.வீ.கே. சிவஞானமும் ஒருவராக சில சமயம் இருக்கலாம். ஏனென்றால் இந்த விடயம் வெற்றிகரமாக நகருமாக இருந்தால் சிங்களத் தரப்பு மாத்திரம் அல்ல சர்வதேச சமூகம்கூட அந்த ஆணையைப் பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்படும்.

ஆகவே, ஏதோ ஒரு வகையில் இதனைக் குழப்புவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இது மேலும் நகரக்கூடாது, முடக்கப்பட வேண்டும் என்றும் சிந்திக்கிறார்கள். இவ்வாறு இதனை முடக்கினால் சந்தோசப்படுவதற்கும் சில பேர் இருப்பதாகத்தான் எங்களுக்குத் தோன்றுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்புச் செய்யவேண்டும் என்று இப்போது ஒரு துண்டுப்பிரசுரம் அடித்து வெளியிடுவது மாத்திரம் அல்லாமல் இந்த முயற்சிகளுக்கு எதிரான கட்டுக் கதைகளையும் அவிழ்த்துவிட்டு வருகின்றது.

இன்னும் சில பேர் பகிஷ்கரிப்பும் பொது வேட்பாளரும் ஒன்றுதான் என்ற விதமான கருத்துக்களையும் சொல்லி வருகின்றார்கள். உண்மையில் பகிஷ்கரிப்பும் பொது வேட்பாளரை நிறுத்துவதும் ஒன்றல்ல. இந்தத் தேர்தலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. இந்தத் தேர்தலுக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவசியமில்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் முன்வைக்க முயற்சிக்கின்றார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் என்பது இலங்கையில் நடக்கக்கூடிய தேர்தல். இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற அனைவரும் வாழ்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இந்தத் தேர்தலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்வது முதலாவதாக அர்த்தமற்ற விடயம்.

இரண்டாவதாக இந்தத் தேர்தலை நாங்கள் ஏன் பாவிக்க விரும்புகின்றோம் என்றால் முக்கியமாக இலங்கையில் இருப்பது வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம்தான், அந்தப் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்து விட்டால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று அரசு இலங்கையிலும் வெளி உலகத்துக்கும் சொல்லிக்கொண்டிருக்கின்றது. எனவே, புரையோடிப் போயிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்பதை உலகறியச் செய்யவும், சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும். இந்நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயமும் பகிஷ்கரிப்பு என்ற விடயமும் ஒன்றல்ல. ஆனால், இரண்டும் ஒன்று என்று தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியை இந்தத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் செய்கின்றார்கள்.

மேலும் பகிஷ்கரிப்பால் எதனையுமே சாதிக்கப்போவது கிடையாது. வெறுமனே துண்டுப்பிரசுரங்களை அடித்து அனைத்து மக்களுக்கும் கொடுத்து விடலாமே தவிர இந்தப் பகிஷ்கரிப்பின் மூலம் நிச்சயமாக எதனையுமே சாதிக்கப்போவது கிடையாது.

அத்தோடு மக்களை வாக்களிக்க வைக்கவே பொது வேட்பாளர் என்ற விடத்தை நாங்கள் எடுத்துள்ளதாகவும் தமிழ்த் தேசிய முன்னணியினர் சொல்கின்றார்கள். உண்மையில் பொது வேட்பாளரை நிறுத்துகின்றபோது மக்கள் போக வேண்டும் என்பதும், அவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதும் மிக மிக முக்கியமான விடயம். பொது வேட்பாளர் என்ற விடயத்தை நாங்கள் முன்னெடுக்கக்கூடிய நிலையில் ஆதரவு கோரி இன்னும் சில தினங்களில் ஜே.வி.பி.யினர் யாழ்ப்பாணம் வருகின்றார்கள். அதேபோல் மற்றவர்களும் இங்கு வரவிருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்தக் கால நேரத்தை நாங்கள் சரியான முறையில் கையாளவேண்டும் என்பது முக்கியமான விடயம் - என்றார்.

## 250 புதிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜென்சன் பிரிஜிங் நிறுவனத்தின் 10 ஆண்டு காலத்தில் அது 750 பாலங்களை வெற்றிகரமாக நிர்மாணித்திருப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராட்டுத் தெரிவித்தார். இதற்காக நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பொனி ஹோர்பாக் அவர்களுக்கு விசேட நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஜென்சன் பிரிஜிங் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 750 பாலங்களின் பணிகள் நிறைவடைந்ததை இன்று நாங்கள் ஒன்றிணைந்து கொண்டாடுகிறோம். இது அந்த நிறுவனம் வெற்றிகரமாக நிறைவேற்றிய மாபெரும் பணி என்பதைக் கூற வேண்டும். இந்த கிராமப்புறப் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றி எனக்குத் தெரியும். அவை மிகவும் பின்தங்கிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலங்களால் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஆளும் தரப்பு உறுதிபூண்டுள்ளது. இந்த விரிவான வீதிக் கட்டமைப்பு, முக்கிய அதிவேகப் பதைகளுக்குப் பொருட்களை கொண்டு செல்வதற்கும், கொழும்பு அல்லது பிற முக்கிய நகரங்களுக்கு பொருட்களை அனுப்புவதற்கும் உதவுகிறது. எனவே, இத்திட்டம் மிகவும் முக்கியமான திட்டம் என்பதை குறிப்பிட வேண்டும். மேலும் இதுபோன்ற 250 பாலங்களை அமைக்க எதிர்பார்த்துள்ளோம்.

நம் நாட்டில் 2019 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த வறுமை விகிதம் தற்போது 25% ஆக அதிகரித்துள்ளது. 2032 ஆம் ஆண்டிற்குள் அதனைப் 10 சதவீதம் வரை குறைக்க வேண்டும் என்பதே ஆளும் தரப்பின் எதிர்பார்ப்பு என்பதைக் கூற வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது, குறைந்த வருமானம் பெறும் மக்களும் அதன் மூலம் பயன்பெறுவதை உறுதி செய்யவேண்டும். கிராமப்புறங்களில் உள்ள மக்களை மையமாகக் கொண்டு பலபரிமாண வறுமையை 10 சதவீம் வரைக் குறைப்பது எமது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

அந்த இலக்கை நோக்கிச் செல்ல இது போன்ற திட்டங்கள் நமக்கு உதவுகின்றன. எனவே இந்த திட்டங்களுக்கு பங்களித்த நெதர்லாந்து அரசிற்கு நான் நன்றி கூறுகிறேன். வடமாகாணத்தில் மக்களின் சுகாதார சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் 4 புதிய வைத்தியசாலைகளை திறப்பதற்கு நெதர்லாந்து தூதுவர் அண்மையில் எம்முடன் இணைந்து கொண்டார்.

இந்த இரண்டு திட்டங்களும் இலங்கையின் கிராமப்புற சமூகத்தை பலப்படுத்தும். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், இந்த திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றை முன்னெடுத்துச் செல்ல நான் நடவடிக்கை எடுத்தேன்.

இலங்கைக்குச் சொந்தமான புராதான பீரங்கிகளை மீள இலங்கைக்கு வழங்கியமை தொடர்பில் நெதர்லாந்து அரசுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் வலுவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை - என்றார்.

## 5 மாவட்டங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளுக்கும் கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹோமாகம கல்வி வலயப் பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் வழமை போன்று இன்று நடைபெறவுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலைகள் இன்று வழமைபோன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பிலான விடயம் சம்பந்தமாகக் கலந்துரையாடினோம். இந்த விடயத்தில் ஆளும் தரப்புடன் இருப்பவர்கள் எதிரணியில் உள்ளவர்கள் என்று அனைவரையும் ஒன்றிணைக்கவுள்ளோம்.

அதனைத் தொடர்ந்து அவர்களுடன் இணைந்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை நேரடியாகச் சந்திக்கவுள்ளோம். பின்னர் இந்த விடயத்திற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வினை ஐக்கியமாக எடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

# அனர்த்தம் பாதித்த மக்களின் நிலைமையை கண்டறிய ஜனாதிபதி மேற்பார்வை வருகை









சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (திங்கட்கிழமை) கொலன்னாவ, களனி, அம்பத்தளை ஆகிய பிரதேசங்களுக்கு மேற்பார்வை விஜயம் மேற்கொண்டார். கொலன்னாவை சேதாவத்த வெஹெரகொட ரஜமஹா விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

களனிஆற்றுப்பள்ளத்தாக்கில்வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும், மழை நீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் நிலம் நிரப்பப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கும் முல்லேரியா மற்றும் ஜனுர் வைத்தியசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள அம்பத்தளை, கல்வான புராண ரஜமஹா விகாரை, சேதவத்த வெஹெரகொட புராண ரஜமஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் .எஸ். சில்வா வித்தியாலயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தியாலய பாதுகாப்பு நிலையம் என்பவற்றுக்குச் சென்ற ஜனாதிபதி, மக்களின் நலன்களைக் கேட்டறிந்ததோடு, அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை தொடர்ச்சியாக பூர்த்தி செய்யும் பணிகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொலன்னாவையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று இரவு முதல் உணவு வழங்குமாறு கொலன்னாவை பிரதேச செயலாளருக்கு அறிவித்த ஜனாதிபதி, அந்த மக்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து நிரந்தர வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். குழாய்களை பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வழிந்து செல்ல வழிசெய்து, மக்களை துரிதமாக மீள்குடியேற்றுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

அனர்த்த சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அங்கு சுட்டிக்காட்டினார்.

கொலன்னாவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அவர், பிரஜைகள் பொலிஸாரின் பங்களிப்புடன் நடமாடும் ரோந்து சேவைகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்கவேண்டும் என்று இராணுவத்தினருக்கு பணிப்புரை வழங்கிய சாகல ரத்நாயக்க, மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

மேலும், அனர்த்த நிலை குறையும் வரை மக்களுக்கு நிவாரணம் வழங்க முப்படையினர் ஆளணி பலத்துடன் தற்காலிக மத்திய நிலையமொன்றை அமைக்குமாறு அறிவுறுத்திய அவர், வெள்ளம் குறைந்த பிறகு ஏற்படக் கூடிய டெங்கு, எலிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த அனைத்து வீடுகளையும் அரசாங்கத்தின் உதவியுடன் இராணுவத்தினரின் பங்களிப்புடன் நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சட்டத்தரணி பிரேமநாத்.சி.தொலாவத்த, எஸ்.எம்.மரிக்கார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியுடனான மேற்பார்வை விஜயத்தில் இணைந்துகொண்டனர்.

(05)

## கொழும்பிலிருந்து பதுளைக்கு பயணித்த ரயில் தடம் புரழவு

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹற்றன் மற்றும் கொட்டகலை ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று (திங்கட்கிழமை) மாலை ரயில் தடம் புரண்டுள்ளது.

இதன் காரணமாக, மலையக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது .இதேவேளை ரயில் பாதையை சரி செய்யும் வரை தலவாக்கலை ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்கட்டுப்பாட்டு அறை மேலும் தெரிவித்துள்ளது.(05)

## ஞாயிறன்று 3 பெண்கள் உட்பட 626 பேர் போதைப்பொருள்களுடன் கைது

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப் பின்போது போதைப்பொருள்களுடன் 3 பெண்கள் உட்பட 626 கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 26 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 5 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 373 கிராம் ஹெரோயின்,160 கிராம் ஐஸ்,198 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வெள்ளத்தை எதிர்கொள்ள நாமும் தயாராவோம்

**காலநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் வெள்ளம் மற்றும் கடும் மழைப் பொழிவு தெற்கில் ஏற்படுத்தும் பெரும் பாதிப்புக்கள் வடக்கு கிழக்கிற்கு அடுத்த மழை காலத்திற்கான எச்சரிக்கை. அதற்கு இப்போதிருந்தே அதிகாரிகள் தயாராக வேண்டும்.**

**கடந்த ஆண்டும் இந்த ஆண்டின் முற்பகுதியிலும் நிலவிய எல்நினோ காலநிலை காரணமாக இலங்கையில் கடும் வறட்சி காணப்பட்டது. மழை வீழ்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. பருவமழை தவிர்ந்து அவ்வப்போது பெய்யக்கூடிய கேடை மழை, மேற்காவுகை மழை என்பன கிடைக்காத நிலையில் அதிஉச்ச வெப்பத்தை இந்த ஆண்டில் இலங்கை மக்கள் அனுபவிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.**

**இப்போது தென்மேற்குப் பருவமழைக் காலம் தொடங்கியதும் குறுகிய நேரத்தில் பெரும் மழைப் பொழிவு ஏற்பட்டு நகரங்களும் கிராமங்களும் வெள்ளக்காடாகின்றன. அனுமதியற்ற கட்டடங்கள், வடிகால்கள் மற்றும் நீரோடும் வழித் தடங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள் என்பன வெள்ளத்திற்கான காரணம் என்று கூறப்படுகின்றது. அவற்றைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அரசுத்தலைவர் பணிப்புரையும் விடுத்திருக்கிறார். ஆனால், அதனால் மட்டுமே வெள்ளம் ஏற்படவில்லை என்பதையும் ஆளும் தரப்பு புரிந்துகொண்டு செயற்படுவது அவசியம்.**

**காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் குறுகிய நேரத்தில் அதிகளவு மழை என்பதை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் இலங்கையின் எந்த நகரும் வடிகால் அமைப்புக்களையோ வசதிகளையோ கொண்டிருக்கவில்லை. அதனால் ஆக்கிரமிப்புக்களை அகற்றினாலும் சட்டத்துக்குப் புறம்பான கட்டடங்களை அகற்றினாலும்கூட இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு கண்டுவிட முடியும் என்று எதிர்பார்க்கமுடியாது. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வகையிலான நகர வடிவமைப்புக்கள், கட்டுமானங்கள் குறித்த நீண்டகாலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுவே நிரந்தரத் தீர்வைத் தரக்கூடும்.**

**இலங்கையோடு ஒப்பிடும்போது சிறந்த வடிகால் அமைப்புக்கள், வசதிகளைக் கொண்டுள்ள மேற்குலக நாடுகளேகூட, காலநிலை மாற்றத்தால் திடீரென ஏற்படும் அதிக மழைப் பொழிவு காரணமாக வெள்ளத்தால் அல்லாடுகின்றன. எனவே ஆக்கிரமிப்புக்களின் அகற்றம் என்பது தற்காலிகமான ஒரு தீர்வே. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற நவீன நகரமைப்புக்கள் மற்றும் கட்டுமானங்கள் குறித்துச் சிந்தித்து நடவடிக்கை எடுப்பதே அவசியம்.**

**அதேநேரம், காலநிலை மாற்றம் காரணமாக தெற்கில் இப்போ–து ஏற்படும் வெள்ளப் பெருக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கை. வடகீழ் பருவமழை இன்னும் சில மாதங்களில் தொடங்கும்போது இங்கும் இதுபோன்ற வெள்ள நிலமைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. கடந்த சில வருடங்களில் யாழ்ப்பாணம் நகரம் உட்பட வடக்கு கிழக்கின் பல இடங்களிலும் இவ்வாறு பெரு வெள்ளம் ஏற்பட்டு அல்லாடியமை நினைவில் இருக்கும். அதுபோன்ற நிலமை மீண்டும் ஏற்படாமல் முடிந்தளவில் வெள்ளத்தை எதிர்கொள்வதற்கு மாநகரங்களையும் நகரங்களையும் தயார்ப்படுத்த வேண்டியது அவசியம். உள்ளூராட்சி சபைகள் இதில் அதிக அக்கறையோடு செயற்படவேண்டும்.**

**மழைக் காலம் தொடங்கிய பின்னர் கூட்டம் போட்டு இது பற்றி ஆராய்வதை விடுத்து இப்போதிருந்தே தீவிரமாகச் செயற்படுவதன் மூலமே வசதிகள் பெரிதும் குறைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் வெள்ள நிலமையைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.**

# அணு ஆயுதங்கள் : பொறுப்பற்ற தலைவர்களால் பதற்றம்







**எஸ். ஸ்ரீதுரை**

1945-ஆம் வருடம் இரண்டாவது உலகப் போரின் இறுதிநாட்களில் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டதில் லட்சக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அணுகுண்டு வீச்சின் பின்விளைவுகளிலிருந்து ஜப்பான் மீண்டு வருவதற்குப் பல ஆண்டுகள் பிடித்தன.

1986-ஆம் வருடம் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த செர்னோபில் நகரில் (இன்றைய உக்ரைனில் உள்ளது) அணு உலைவெடித்ததில் நூற்றுக்கும் குறைவானவர்களே உயிரிழந்தனர் என்று கணக்கிடப்பட்டாலும், அதிலிருந்து வெளிப்பட்ட கதிரியக்கம் பரவிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்களில் பலரும் புற்றுநோய் பாதிப்புக்குள்ளானார்கள்.

2011-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம், அதைத் தொடர்ந்து உருவாகிய சுனாமி ஆகியவற்றின் காரணமாக ஜப்பானின் ஃபுகுஷிமா அணு உலை பெரும் பாதிப்புக்குள்ளாகிக் கதிர்வீச்சு வெளியேறத் தொடங்கியது. இதன் காரணமாக சுமார் ஒரு லட்சம் பேர் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். கதிரியக்கம் காரணமாகக் கடல்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்பட்டன.

அணுகுண்டு வீச்சிற்கும் அணுக்கதிர்களின் கசிவுக்கும் இந்த உலகம் ஏற்கெனவே மிகப்பெரும் விலையைக் கொடுத்துள்ளது. மற்றுமொரு அணுகுண்டுவீச்சையோ, அணுக்கதிர்பரவலையோ எதிர்கொள்ளத் திராணியற்ற நிலையில்தான் நாம் இருக்கின்றோம். இதையெல்லாம் கருத்தில் கொள்ளாத உலகநாடுகள் சிலவற்றின் தலைவர்கள் சிறிதும் பொறுப்பில்லாமல் 'அணு ஆயுதப் போருக்குத் தயார்!' என்று தோள்கொட்டுவதை என்னவென்று சொல்ல?

பொதுவுடமை அதிகாரத்தின் பிடியில் சிக்கியுள்ள சிறிய நாடு வடகொரியா. அந்நாட்டின் அதிபர் கிம் ஜோங் உன் தம்முடைய குடிமக்களின் நலன்களை கவனிப்பதை விட்டுவிட்டு, ஏவுகணைகளைத் தயாரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றார். தமது ஏவுகணைச் சோதனைகளால் அண்டை நாடுகளாகிய ஜப்பானையும் தென்கொரியாவையும் எப்பொழுதும் பதற்றத்திலேயே வைத்திருக்கிறார்.

வல்லரசு நாடாகிய ரஷியாவின் அதிபர் புதினும் ஏறக்குறைய இதுபோன்றுதான் நடந்து கொள்கின்றார். ரஷியா- உக்ரைன் இடையிலான சண்டை கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. இந்நிலையில், உக்ரைன் நாட்டில் அமைந்துள்ள ஸபோரிஷியா அணு உலையின் அருகில் இருநாட்டுப் படைகளுக்கும் இடையில் அவ்வப்பொழுது நிகழும் பரஸ்பர குண்டு வீச்சால் செர்னோபில் போன்ற நிகழ்வு மீண்டும் ஒருமுறை அரங்கேறிவிடக் கூடாது என்று இவ்வுலகமே பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் மீது தீராக் கோபத்தில் இருக்கும் ரஷிய அதிபர் புதின், தமது நாட்டின் அணு ஆயுதப் படைப் பிரிவினரைப் போர் ஒத்திகையில் ஈடுபடச்சொல்லி உத்தரவிட்டிருப்பதாக வந்துள்ள ஊடகச் செய்திகள் நம்மை அதிர்ச்சியின் உச்சத்திற்கே அழைத்துச் செல்கின்றன.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் இஸ்ரேலுக்குள் ஹமாஸ் தீவிரவாதிகள் புகுந்து அப்பாவிகள் பலரைக் கொன்றதுடன் ஏராளமானோரைக் கடத்திச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள காஸா பகுதியில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் – ஹமாஸ் போர் பல மாதங்களாக நீடித்து வரும் நிலையில் இஸ்ரேல் அமைச்சர்களில் ஒருவராகிய ஏலியாஹூ பாலஸ்தீனப் பகுதிகளின் மீது அணுகுண்டு வீசுவதைப் பற்றி பேட்டியளித்துள்ளது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில், பழைய வன்மத்தைச் சொல்லி, ஈரான், இஸ்ரேல் இடையிலான ஏவுகணை வீச்சு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஈரான் நாட்டு அணுசக்தி ஆலோசகர் கமால் ஹராசி 'நாங்கள் அணு ஆயுதப் போருக்கும் தயார்' என்று எச்சரிக்கை விடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளையும் பார்க்கும்பொழுது, அணு ஆயுதப் பிரயோகம் குறித்த விஷயத்தில் உலக நாடுகள் சிலவற்றின் தலைவர்கள் நிதானமாகச் சிந்திக்காமல், உணர்ச்சி வேகத்தின் அடிப்படையிலேயே செயல்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது. ரஷ்யா உள்ளிட்ட ஐந்து வல்லரசுளும் இந்தியா உள்ளிட்ட அணுஆயுதத் தயாரிப்புத்திறன் கொண்ட ஐந்துநாடுகளும் சேர்த்துப் பன்னிரண்டாயிரத்துக்கும் அதிகமான அணு ஆயுதங்களைத் தம் கைவசம் வைத்திருக்கின்றன. இவற்றில் ஒரே ஒரு குண்டு வெடித்தாலும், அதனை நாம் வாழுகின்ற இந்த பூமியால் தாங்க இயலாது.

2017-ஆம் ஆண்டு வடகொரியா பூமிக்கடியில் சக்தி வாய்ந்த அணுகுண்டு சோதனை நடத்தியபொழுது அந்தப் பிரதேசத்திலிருந்த மலை சுமார் இருபது அங்குலம் அளவுக்கு பூமியில் புதைந்ததாக ஆய்வுகள் தெளிவுபடுத்தின.

குழந்தைகளின் கையிலுள்ள விளையாட்டு பொம்மையைப் போல, தாங்கள் கைவசம் வைத்திருக்கும் அணுஆயுதங்களையும் விளையாட்டுப் பொருளாக உலகநாடுகளின் தலைவர்கள் சிலர் கருதுவது சரியல்ல. இன்னொரு முறை அணுகுண்டு வீசப்பட்டால், நாம் வாழும் புண்ணிய பூமியானது பல நூற்றாண்டுகளுக்குப் புல்பூண்டற்றுப் போய்விடும். இவ்விஷயத்தில், இனி எந்த ஒரு நாட்டுக்கும் அணு ஆயுதப் பிரயோகம் என்ற சிந்தனையே ஏற்படாமல் இருப்பதற்கான முன்னெடுப்புகளை ஐ.நா. சபை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இருதரப்புப் பிரச்னைகளுக்குப் போர் தீர்வாகாது. மாறாக, பிரச்னைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்வதே நல்லது என்ற தனது உறுதியான கொள்கையை நீண்ட காலமாகவே சர்வதேச அரங்குகளில் முழங்கி வருகின்ற நமது பாரத நாடு இவ்விஷயத்தில் ஐ.நா. சபையின் சீரிய முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும் என்பதே அமைதியை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

காலைக்கதிர் Kalaikkathir

வீட்டு உரிமையாளர்கள் உறக்கத்தில்:

# பத்தனையில் வீடுகள் உடைத்து நகை, பணம் என்பன திருட்டு

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள இரு வீடுகளில் தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (திங்கட் கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன் இது குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இரு வீடுகளிலும் உரிமையாளர்கள் உறக்கத்தில் இருந்த வேளை வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டு உள் நுழைந்த கொள்ளையர்கள் 2 பவுண் தங்க நகைகளையும் 55850 ரூபா பணத்தையும் திருடியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸாரும், நுவரெலியா தடயவியல் பிரிவு பொலிஸாரும் மோப்ப நாய்களின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (05)

# நெதர்லாந்தின் உதவியுடன் 750 பாலங்கள் நிர்மாணிப்பு

## 6 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்றன



நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையின் கிராமப் புறங்களில் 750 பாலங்கள்




நிர்மாணிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டதன் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பு ஷங்கிரில்லா விடுதியில் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் நடைபெற்றது.

இலங்கையின் 9 மாகாணங்களில் 210 மில்லியன் யூரோ செலவில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பணிகளின் மூலம் சுமார் 6 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. (05)

# ரயிலில் பயணித்த வெளிநாட்டுப் பிரஜை சுரங்கப்பாதையில் மோதி உயிரிழந்தார்

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் லயில் சுரங்கப்பாதையில் மோதி நேற்று உயிரிழந்துள்ளார் என நானுஓயா ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எல்ல பிரதேசத்தை நோக்கி ரயிலில் பயணித்த வெளிநாட்டு பிரஜையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நானுஓயா மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் சுரங்கப்பாதையில் மோதி இவர் உயிரிழந்துள்ளார் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதனையடுத்து உயிரிழந்தவரது சடலம் ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரின் உதவியுடன் ஹப்புத்தளை ரயில் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(05)

# தாயின் கல்லறை மீது சத்தியம் செய்வதாகக்கூறி அழைத்துசென்றுறே தீயிட்டு கொலை செய்தேன்

## இளைஞன் வாக்குமூலம்

'தாயின் கல்லறை மீது சத்தியம் செய்கிறேன்' என பெண்ணை சேமக்காலைக்கு அழைத்து சென்றே இளைஞன் தீ மூட்டி படுகொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம்கொஞ்சேஞ்சிமாதாசேமக்காலைக்குள் வைத்து, கடந்த சனிக்கிழமை பெண்ணொருவரை, இளைஞன் ஒருவர் உயிருடன் தீ மூட்டி படுகொலை செய்துள்ளார்.

உயிரிழந்தபெண்ணுக்குதிருமணத்தைமீறியகாதல் தொடர்பு சுமார் ஐந்து வருட காலமாக இளைஞனுடன் இருந்துள்ளது. இந்நிலையில் இளைஞன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்கு முயன்றுள்ளார்.அதனை அறிந்து, இளைஞன் தன்னையே திருமணம் செய்ய வேண்டும் என தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

அந்நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த பெண்ணை மட்டுவில் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் அழைத்து, சேமக்காலையில் உள்ள தனது தாயின் கல்லறை மீது 'உன்னையே திருமணம் செய்வேன்' என சத்தியம் செய்கிறேன் என சேமக்காலைக்குள் அழைத்து சென்று , தாயின் கல்லறைக்கு அருகில் மறைத்து வைத்திருந்த பெற்றோலை எடுத்து பெண் மீது ஊற்றி எரித்து படுகொலை செய்துள்ளார்.

பெண்ணை படுகொலை செய்த இளைஞனை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளின் பின்னர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் சனிக்கிழமை முற்படுத்திய வேளை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (05)

# கொழும்பில் பாடசாலைகளுக்கு அருகில் ஆபத்தான 40 மரங்கள்

கொழும்பில் உள்ள பல்வேறு பாடசாலைகளுக்கு அருகில் ஆபத்தான நிலையில் 40 மரங்கள் காணப்படுவதாகக் கொழும்பு மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவைகள் சங்கத்தால் கொழும்பு மாநகர சபைக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவைகளின் சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தனியார் துறை முதலீடுகளுக்கான சாத்தியங்களை வடக்கில் ஆராய்ந்த முன்னணி தனியார் கம்பனிகள்

14 முன்னணித் தனியார் துறைக் கம்பனிகள் அடங்கிய தூதுக்குழுவினர், இலங்கை ஊழியர் சம்மேளனத்துடன் சேர்ந்து, வட மாகாணத்தில் பிரதான துறைகளில் உபாய மார்க்கமிக்க முதலீடுகள், வர்த்தகம் மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள் என்பவற்றை ஆராய்வதற்காக உயர் மட்ட விஜயத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஊழியர் சம்மேளனத்தின் பங்காண்மையுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விஜயம் வட மாகாணத்தில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை எடுத்துக்காட்டி, பிரதான பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியில் கலந்துரையாடலையும் ஒத்துழைப்பையும் போஷித்து, வியாபாரங்களுக்கும் சமுதாயங்களுக்கும் நன்மை பயக்கும் பங்காண்மையை வசதிப்படுத்துவதை விஜயத்தின் பிரதான குறிக்கோள்களின் மத்தியில் கொண்டுள்ளது.

வட மாகாண பிரதம செயலாளரான லட்சுமணன் இளங்கோவனுடனான சந்திப்புக்கு மேலதிகமாக, வட மாகாணத்தில் வியாபாரம் செய்வதற்கான வாய்ப்புக்கள், கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகைத் தோற்றப்பாடு பற்றிய பகுப்பாய்வை வழங்குவதற்கான பங்கீடுபாட்டாளர் கலந்தாலோசிப்பை விஜயம் உள்ளடக்கியிருந்தது. இதற்குப் பிரதம செயலாளர் அலுவலகம் தலைமை வகித்தது.

அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டைக்கான விஜயத்தையும் தொழில்முனைவோர் மற்றும் வியாபாரச் சங்கங்களுடன் வலையமைப்புருவாக்க நிகழ்வையும் அரசாங்க அமைப்புக்கள் மற்றும் பிராந்தியச் சம்மேளனங்கள் உள்ளிட்ட பிரதான துறைசார் செயற்படுனர்களுடன் கலந்தாலோசிப்பையும் விஜயம் உள்ளடக்கியிருந்தது.

பிராந்தியத்தில் முதலீட்டால் உந்தப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைப் பாராட்டி, வட மாகாணப் பிரதம செயலாளர் லெட்சுமணன் இளங்கோவன் பின்வருமாறு குறிப்பிட்டார் -

முன்னோக்கிப் பார்க்கையில், அபிலாஷைகளைச் செயற்பாடுகளாக நிலைமாற்றுவதற்கு நாம் ஒன்றுபடுவோம். முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்தும் தூதுக்குழுவை நாம் வரவேற்று அதற்கு ஆதரவு தெரிவிப்பதுடன் அதனுடன் பணியாற்றக் காத்திருக்கின்றோம்.

பல் துறைகளின் ஊடே வாய்ப்புக்களில் அதிகரிப்பைப் பிராந்தியம் அனுபவித்து வரும் நிலையில், உட்கட்டமைப்பு முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ள அதேவேளை, உள்நாட்டுச் சந்தையையும் ஏற்றுமதிச் சந்தையையும் இலக்குவைக்கும் விவசாயம் மற்றும் கடற்றொழில், அதேபோன்று நீரியல் வளம் ஆகிய துறைகள் வளர்ச்சிக்கும் விருத்திக்குமான பெரும் சாத்தியத்தைக் கொண்டுள்ளன.

மேலும்,இந்தக் கருத்திட்டத்தின் கீழான இடையீடுகள், வளர்ச்சியின் நன்மைகள் சமுதாயத்தின் சகல உறுப்பினர்களின் மத்தியிலும் ஒப்புரவுடன் பகிரப்பட்டு அதன் மூலம் மிகவும் நிலைபேறான மற்றும் நியாயமான பொருளாதார அபிவிருத்தி போஷிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தி, உள்ளடக்கும் தன்மையையும் பால்நிலைச் சமத்துவத்தையும் மேலும் வலியுறுத்துகின்றது.



இலங்கையின் பொருளாதார மீறல் எனும் தற்போதைய சூழமைவில், தனியார் துறை அமைப்புக்கள் உள்ளிட்ட அரசாங்க மற்றும் ஏனைய சூழியல் முறைமைச் செயற்படுநர்கள், மாகாண மற்றும் பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இன்றியமையாத வகிபாத்திரத்தைக் கொண்டுள்ளனர். விஜயத்தின் வெற்றி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஈ.எவ்.இன் பணிப்பாளர் நாயகம் ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி வஜிர எல்லபொல பின்வருமாறு குறிப்பிட்டார் -

'தேசிய தொழில்வழங்குநர் அமைப்பு என்ற ரீதியில் தனியார் துறையினுள் ஆர்வத்தினை உருவாக்குவதில் மூலகர்த்தாவாக இருந்து வருவதுடன் இது வடக்கில் முதலீட்டு வாய்ப்புக்களை ஆராய்வதற்காக வியாபாரத் தூதுக்குழுவின் விஜயத்துக்கு இட்டுச்சென்றுள்ளது. தொழில்முனைவு விருத்தி, தொழில் உருவாக்கம், பல்வகைமை மற்றும் உள்ளடக்கம் ஆகியவை ஈஎவ்சி மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்பு கொண்டுள்ள சில பிரதான விழுமியங்களாகும். இந்த விழுமியங்களுடன் நெருக்கமாக இயைபுறும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இடையீடுகளின் குறிக்கோள்களும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியில் கவனம் குவிக்கும் தேசியக் கொள்கை ஆகியவற்றுடனான இதன் ஒட்டுமொத்தப் பொருத்தப்பாடும் இந்தக் கருத்திட்டத்தில் எமது ஒத்துழைப்பிற்கான உந்துசக்தியாக இருந்தன.

இந்த விஜயம், நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பாதிப்புறு நிலையிலுள்ள நபர்கள் மற்றும் தொழில் முயற்சியாண்மைகளின் முன்னேற்றத்தினை மேம்படுத்தும் (ஊணயுஏநு) சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கருத்திட்டத்தின் பகுதியாக அமுல்படுத்தப்பட்டது. உள்ளடக்கும் தன்மை மிக்க வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு உதவுவதற்காக கௌரவமான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கிய ஜஎல்ஓவின் பதிற்செயற்பாடுகளின் மத்தியில் பிஏவிஈ கருத்திட்டம் காணப்படுகின்றது. வட மாகாணத்தில் வாழும் மிகவும் பாதிப்புறு நிலையில் உள்ள மிகவும் ஓரங்கட்டப்பட்ட ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும், உள்ளடக்கும் தன்மை மிக்க வளர்ச்சியையும் தனியார் துறை முதலீட்டையும் தொழில் முயற்சியாண்மையையும் பால்நிலைச்சமத்துவம் மற்றும் உள்ளடக்கும் தன்மையினையும டிஜிற்றல்மயமாக்கத்தையும் மேம்படுத்துவதன் மூலம் கௌரவமான வேலையை உருவாக்குவதை கருத்திட்டம் முன்னுரிமைப்படுத்துகின்றது.

ஐ.எல்.ஓ.,வின் பிரதம தொழில்நுட்ப ஆலோசகர் தோமஸ் கிரிங் பின்வருமாறு குறிப்பிட்டார் -

வட மாகாணத்தில் தனியார் துறை முதலீடுகளை அதிகரிப்பது வியாபாரங்களை அர்த்தமிக்கதாக மாத்திரம் ஆக்காது, மனித மூலதனத்தை வலுப்படுத்தி, அனுகூலம் கிட்டாத சமுதாயங்களுக்கு உறுதியான வருமான மூலங்கள் மூலம் நன்மை பயக்கின்றது- அங்கவீனமான பாதிப்புறு நிலையில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களுக்காக தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் சகலருக்கும் நன்மை பயத்தல் எனும் இதன் முன்மொழிவுகள், நெருக்கடி மீளளுக்கும் நல்லிணக்கத்துக்கும் உதவுகின்றன.

வட மாகாணத்தில் முதலீட்டுச் சூழல் மற்றும் தோற்றப்பாடு பற்றிய மேம்பட்ட புரிதலை அதிதிகளுக்கு வழங்கி, தனியார் துறைக்கும் உள்ளூரதிகார சபைகளுக்கும் இடையில் எதிர்கால ஒத்துழைப்பிற்கான அத்திபாரத்தினை இந்த விஜயம் இட்டுள்ளது. ஒட்டுமொத்த பிராந்தியத்திலும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவதை அடுத்த படிகள் சம்பந்தப்படுத்தும்.

ஒரே ஒரு முத்தரப்பு ஐ.நா. முகவரான சர்வதேச தொழிலாளர் அமைப்பு, தொழில் நியமங்களை நிர்ணயித்து, உலகம் முழுவதும் வேலை செய்யும் சகல ஆண்கள் மற்றும் பெண்களுக்காக கௌரவமான வேலையை மேம்படுத்தும் கொள்கைகளை உருவாக்கி, நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்காக அரசாங்கங்களையும் தொழில் வழங்குநர்களையும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் ஒன்றுசேர்க்கிறது.(05)



## ஆக்கிரமிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் நிலம் நிரப்பப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கும் முல்லேரியா மற்றும் ஜனுர் வைத்தியசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று கொலன்னாவ, களனி, அம்பத்தளை ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றார். இந்தப்பயணத்தில் கொலன்னாவை சேதாவத்த வெஹெரகொட ரஜமஹா விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள அம்பத்தளை, கல்வான புராண ரஜமஹா விகாரை, சேதவத்த வெஹெரகொட புராண ரஜமஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் எஸ். சில்வா வித்தியாலயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தியாலய பாதுகாப்பு நிலையம் என்பவற்றுக்குச் சென்ற ஜனாதிபதி, மக்களின் நலன்களைக் கேட்டறிந்ததோடு, அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை தொடர்ச்சியாக பூர்த்தி செய்யும் பணிகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொலன்னாவையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று இரவு முதல் உணவு வழங்குமாறு கொலன்னாவை பிரதேச செயலாளருக்கு அறிவித்த ஜனாதிபதி, அந்த மக்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து நிரந்தர வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். குழாய்களை பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வடிந்துசெல்ல வழிசெய்து, மக்களை துரிதமாக மீள்குடியேற்றுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

இயற்கை இடர் சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அங்கு சுட்டிக்காட்டினார்.

கொலன்னாவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அவர், பிரஜைகள் பொலிஸாரின் பங்களிப்புடன் நடமாடும் சுற்றுக்காவல் சேவைகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இடரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்க வேண்டும் என்று இராணுவத்தினருக்குப் பணிப்புரை வழங்கிய சாகல ரத்நாயக்க, மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இடர் நிலை குறையும்வரை மக்களுக்கு நிவாரணம் வழங்க முப்படையினர் ஆளணி பலத்துடன் தற்காலிக மத்திய நிலையமொன்றை அமைக்குமாறு அறிவுறுத்திய அவர், வெள்ளம் குறைந்த பிறகு ஏற்படக் கூடிய டெங்கு, எலிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இடர் காரணமாக முற்றாகச் சேதமடைந்த அனைத்து வீடுகளையும் அரச உதவியுடன் இராணுவத்தினரின் பங்களிப்புடன் மீளக் கட்டமைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜயமுதித ஜயசூரிய நீதிமன்றில் கோரிக்கை விடுத்து இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோரினார்.

இதன்படி, ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கிய நீதிபதி வழக்கை ஜூன் 14 மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும், தற்போது பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை அன்றைய தினம் வரை நீடிக்கவும் உத்தரவிட்டார்.

## 4 கங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகிறது.

நில்வலா கங்கையின் மேல் பகுதியில் நேற்று இரவு முதல் பெய்துவரும் பலத்த மழை காரணமாக பஸ்கொட, கொட்டபொல, பிட்டபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, கம்புருபிட்டிய, திஹாகொட, மாத்தறை மற்றும் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

கிங்கங்கையின் மேல் பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நெலுவ, தவலம, நாகொட, நியாகம, வெலிவிட்டிய திவித்துர, எல்பிட்டிய, அக்மீமன, பத்தேகம மற்றும் போபே, போத்தல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் வெள்ளப்பெருக்கு நிலைமை ஏற்படலாம்.

அத்துடன், களனி கங்கையின் மேல் பகுதிகளில் நேற்று இரவு முதல் கணிசமான மழை பெய்து வருவதால், தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலகங்களுக்குஉட்பட்ட தாழ்நிலப் பகுதிகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சுற்றாடல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆளும் தரப்பு என்ற வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க ஆரம்பித்துள்ளோம். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ள நிலைமை சீரானவுடன் அந்தப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மழை மற்றும் வெள்ளத்தால் டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் உள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளோம். மேலும் சேதமடைந்துள்ள பாலங்கள், வடிகாண்கள், வீதிகள் ஆகியவற்றைப் புனரமைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் நலனுக்காக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளன. இந்த நடவடிக்கையில் பணத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் தேவையான பணிகளைச் செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆனால் இந்த நேரத்தில் சிலர் விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்து அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கின்றனர். ஆனால் நடக்க வேண்டியது அதுவல்ல. இந்த நேரத்தில் விமர்சனங்களைவிட முக்கியமானது இடம்பெயர்ந்த மக்களை விடுவிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான்.

வெள்ள நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் அதனை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பது அவசியம். அதற்காக ஆளும் தரப்பு என்ற ரீதியில் எவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை கண்டறியுமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், இன்று முதல் 10 நாட்களுக்குள் உள்ளூராட்சி மன்றங்களில் இதுவரை நிரந்தர நியமனம் பெறாத 8,400 ஊழியர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தி நிரந்தர நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தைக் குழப்புவதற்கு ஒரு குழுவினர் செயல்படுவதையும் நாம் அறிவோம். எனவே, எந்தச் சூழ்நிலையிலும் ஆளும் தரப்பு மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலக சுற்றாடல் தினத்தின் தேசிய விழாவை ஜூன் 5 நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த விழாவை நிறுத்தி, அந்த நிதி ஒதுக்கீட்டை மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

விழா நிறுத்தப்பட்டாலும் உலக சுற்றாடல் தின தேசிய விழாவிற்காக நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் செடிகளை நடும் பணியை நாம் முன்னெடுக்கவுள்ளோம். உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு செடியை நட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.





காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு. மட்டிக்கழி அம்மன் பீடம் உள்ள காணியை அபகரித்து மீன்வாடி அமைப்பது இந்து மதத்தை இழிவுபடுத்தும் செயல்

## பொது அமைப்புக்கள் கண்டனம்



மட்டக்களப்புமட்டிக்கழிகடற்கரைப்பகுதியில் ஆலைய தீ மிதிப்பின் போது மஞ்சல் குளிப்பதற்காக அமைக்கப்பட்ட அம்மன் பீடத்தைச் சுற்றியுள்ள காணியை மீன் வியாபாரி ஒருவர் சட்டவிரோதமாக அபகரித்து வாடிஅமைத்து இந்துமதத்தைஇழிவுபடுத்தும் செயலில் ஈடுபட்டுவருகின்றார் அதற்கு அதிகாரிகளும்உடந்தையாகச்செயற்படுவதை வன்மையாகக் கண்டிப்பதுடன் அதனை அகற்றாவிடில் மாநகர சபையை இந்து மக்கள் முற்றுகையிட்டு போராடப் போவதாக அந்த பிரதேச பொது அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மட்டிக்கழிஅறநெறிபொடசாலைகட்டடத்தில் ஆலைய பரிபாலன சபை மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து இடம்பெற்ற ஊடக மாநாடில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தனர்.

மட்டிக்கழி ஸ்ரீதிரௌபதாதேவி ஆலய தீ மிதிப்பின் போது மஞ்சல் குளிப்பதற்காக பார்வீதியிலுள்ள கடற்கரைபகுதியில் சட்ட ரீதியாக அம்மன் பீடம் அமைக்கப்பட்டு காலம் காலமாக அந்த பகுதியில் மீனவர்கள் கூட மீன்படி படகுகளை நிறுத்தாது மாசடைய செய்யாது மீனவர்களும் ஆலைய பரிபாலனசபையினர் புனித பகுதியாகப் பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த காணியை மட்டு மாநகர சபை ஆணையாளர் மீன் வியாபாரி ஒருவருக்கு மீன்வாடி அமைப்பதற்கு குத்தகைப்பணமாக ஒரு லச்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று உடன்படிக்கை மூலம் அனுமதியளித்ததையடுத்து அவர் அந்த பகுதியை அபகரித்து மீன் வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்.

இது தொடர்பாக ஆலயப் பரிபாலன சபை மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், மாதர் சங்கங்கள், மீனவர் சங்கங்கள், விளையாட்டு கழகங்கள், இந்து மத்ததை இழிவுபடுத்தும் செயற்பாட்டைக் கண்டித்து அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், மாநகரசபை ஆணையாளர் உள்ளிட்டவர் களுக்கு கடித மூலமாகவும் நேரடியாகவும் தெரிவித்தனர்.

இதன் பின்னர் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். ஆனால் அதற்கான தீர்வைப் பெற்றுதருவதாகத் தெரிவித்தபோதும் எதுவிதமான தீர்வும் கிடைக்கவில்லை.

இருந்தபோதும் பிரதேச செயலாளருக்கு கீழ் உள்ள இந்த அரச காணியை பிரதேச செயலாளரின் அனுமதியின்றி எவ்வாறு மாநகரசபை மீன்வாடி அமைக்க அனுமதி வழங்க முடியும்;. இது ஒரு மோசடியான செயல் என்பதுடன் இந்து மதத்தை இழிவு படுத்தும் திட்டமிட்ட செயலாகும்.



இந்த இந்து மத இழிவுபடுத்தும் செயலுக்கு உறுதுணையாக சில அரச அதிகாரிகளும் மீன் வியாபாரியுடன் சேர்ந்து செயற்படுகின்றனர். எனவே, காலம்காலமாக இந்தப்பகுதிமக்களும் ஆலய பரிபாலனசபை பராமரித்துவரும் அந்த புனித பகுதியில்; சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் மீன் வாடி உடன் அகற்றப்பட வேண்டும். இல்லாவிடில் இந்து மக்களை அணிதிரட்டி மாநகர சபையினை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் தெரிவித்தனர். (05)

# பொது மக்களுக்கான பொலிஸாரின் அறிவிப்பு

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டமக்களுக்குநிவாரணம் வழங்குவதற்காக பொலிஸ், விசேட அனர்த்த நிவாரணப் பிரிவை நிறுவியுள்ளது.

011-242 1820 மற்றும் 011-242 1111 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மக்கள் அனர்த்தநிவாரணதேவைகளுக்காக அழைக்க முடியும் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)

# அச்சுவேலியில் வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்



யாழ்.அச்சுவேலி பிரதேசத்தில் வீடு ஒன்றின் மீது இனம் தெரியாத குழு ஒன்று பெற்றோல் குண்டு தாக்குதலில்வீடுபலத்தசேதமடைந்த



சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித் தனர்.

இது பற்றி தெரியவருவதாவது -

அச்சுவேலி மேற்கு கருமந் திரதுறை வீதியிலுள்ள பாலசிங்கம் சதானந்தன்என்பவரதுவீட்டின்மீதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இவர் பண்ணை ஒன்றை நடத்திவருகிறார் எனவும் இவரின் சகோதரிக்கும்இவருக்கும்இடையே சொத்து சம்மந்தமான ஒபிரச்சனை இடம்பெற்று வந்துள்ளது.

இந்தநிலையில்சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை சதானந்தன் சகோதரியின் உறவினர் ஒருவரை தாக்கியதில் அவரின் கை முறிந் துள்ளது. இவ்வாறான நிலையில் இரவு 8 மணிக்கு 6 மோட்டார் சைக்கிளிலும், ஓர்; ஓட்டோவிலும் சென்ற குழு ஒன்று குறித்த வீட்டின் மீதுஇரண்டுபெற்றோல்குண்டுகளை வீசி எறிந்துவிட்டு தப்பி ஓடியுள்ளது.

இதில் ஒரு குண்டு மட்டும் வெடித்து தீப்பற்றி யதையடுத்து வீட்டின் சமையலறை பகுதி பலத்த சேதமடைந்துள் ளதுடன் வீட்டில் இருந்த எவருக் கும் எதுவிதமான சேதமும் ஏற்பட வில்லை என பொலி ஸாரின்ஆரம்பகட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாகஅச்சுவேலிபொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கண்டி தேசிய வைத்தியசாலைக்குள் பிரவேசிக்கும் அதிகளவு வாகனங்கள்

கண்டி தேசிய வைத்தியசாலைக்குள் நாளாந்தம் பிரவேசிக்கும் 6000 வாகனங்களில் 2000 வாகனங்கள்மாத்திரமேவைத்தியசாலை மற்றும் நோயாளர்களின் தேவைக்காக வருவதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மருத்துவமனை ஊழியர்கள் நடத்திய ஆய்வில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழியாக மருத்துவமனை வழியாக நான்காயிரம் வாகனங்கள் மட்டுமே செல்கின்றன எனவும் தெரியவந்துள்ளது.

கண்டி தேசிய வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரேஷா பெர்னாண்டோ, கடந்த வியாழனன்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டதகவலைத்தெரிவித்தார்.

மேலும் பணிப்பாளர் தமது உரையில் தெரிவிக்கையில் -

மருத்துவமனை ஊழியர்களின் கணக்கெடுப்பின்படி, காலை 6.00-7.00 மணிக்குள் சுமார் 700 வாகனங்கள் இந்த சாலையில் செல்கின்றனஎனவும்அதேபோன்று காலை 7.00-8.00 மணிக்குள் சுமார்1300 வாகனங்கள் அதிகரித்து வருவதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்படும் போது பிற்பகல் வேளையில் இவ்வாறான வாகன நெரிசல் ஏற்படுவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலை ஊடாகச் செல்லும் வீதியில் சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 6000 வாகனங்கள் பயணிக்கின்றன எனவும் திருமதி இரேஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஒவ்வொரு 06 வினாடிக்கும் ஒரு வாகனம் மருத்துவமனை வாயிலுக்குள்நுழைகின்றனஎன்றும் அவற்றில் பெரும்பாலானவை ஓட்டோக்கள் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நெரிசல் காரணமாக சில சமயங்களில் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ்கள், சாதாரண வாகனங்கள் என மருத்துவமனை சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், இந்த தாமதத்தால் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளி உயிரிழக்கக் கூட வாய்ப்புள்ளது என்றும் அவர் சொன்னாள்.

ஹந்தான பிரதேசத்திலிருந்து வில்லியம் கோபல்லவ மாவத்தை நோக்கி பயணிக்கும் சில வாகன சாரதிகள் குறுகிய மாற்றுப்பாதையாக வைத்தியசாலை ஊடாக செல்லும் வீதியைப் பயன்படுத்துவதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இந்த நிலைமை வைத்திய சாலையின் நிர்வாகப் பணிகளுக்கு பெரும் தடையாக இருப்பதாகவும், வைத்தியசாலையின்பாதுகாப்புக்குப் பொறுப்பான தனியார் பாதுகாப்பு பிரிவினர் இதனைக் கட்டுப் படுத்தப்போவதாகவும், சில சாரதிகள் முரண்பாடுகளையும் ஏற்படுத்துவதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆகவே, இது தொடர்பில் பொறுப்பான திணைக்களங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறுகேட்டுக்கொள்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கூற்றுக்களைப்பரிசீலித்த குழுவின் தலைவர் குணதிலக ராஜபக்ஷ, எம்.பி., அவ்வாறு வைத்தியசாலை வளாகத்தினுள் வாகனங்களை ஓடவிடாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவுக்குஆலோசனை வழங்கினார்.

ஆபத்தான நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டால் உயிரிழப்புகள் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள், கண்டி மாவட்டச்செயலாளர் சந்தனதென்னகோன் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (05)

# வெலிகந்த வீட்டிற்குள் நுழைந்து ஜெனரேட்டர், கிரைண்டர் திருட்டு

நாவலப்பிட்டி – குருந்துவத்தை வெலிகந்தபிரதேசத்தில்வீடொன்றிற் குள்நுழைந்து6லட்சத்து25ஆயிரம் (625000) ரூபாபெறுமதியான ஜெனரேட்டர் மற்றும் கிரைண்டர் என்பவற்றைதிருடிச்சென்றநான்கு இளைஞர்களை குருந்துவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த ஜெனரேட்டர் மற்றும் கிரைண்டரை கம்பளையில் உள்ள முன்னணிமீன்வியாபாரிஒருவருக்கு 75000ரூபாவுக்குவிற்பனைசெய்த சந்தேக நபர்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய் யப்பட்ட நான்கு இளைஞர்களும் குருந்தவந்தலந்தன்ஹில்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

குருதுவத்தைபொலிஸ்நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் சரத் விஜேசிங்க, தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(05)

# இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவராக துஷார லொக்குகுமார நியமனம்



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அதன் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகித்த துஷார லொக்குகுமார மே மாதம் 30 ஆம் திகதி முதல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த அவர் பல்வேறு அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளதுடன் அந் நிறுவனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நீண்ட காலம் பதவி வகித்த அவர் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டி.வி. உப்புல் தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்ததை தொடர்ந்து இப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைகழகப் பட்டதாரியாவார். நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் செல்வி நயனா குமாரி சோமரத்னவும் கலந்து கொண்டார். (05)

# தேர்தல்களை பிற்போடும் முயற்சியை எதிர்த்து ஐ.நாவுக்குக் கடிதம்

## சிவில் சமூகம் வழங்கியது



தேர்தல்களை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

நாடாளுமன்ற ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளதை தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிவில்சமூக பிரதிநிதிகள் பாலித ரங்க பண்டாரவின் கருத்தை ஜனநாயக விரோத கருத்து எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் போராட்ட பிரஜைகள் அமைப்பு, தேசிய சிவில் அமைப்புகளின் முன்னணி, மின்சார பாவனையாளர்கள் சங்கம் உட்பட பல அமைப்புகள் இணைந்து இந்தக் கடிதத்தை இலங்கைக்கான ஐக்கியநாடுகளின் அலுவலகத்திடம் கையளித்துள்ளனர்.

மே 28 ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கை மக்களின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ள சிவில் சமூக பிரதிநிதிகள், இதன் காரணமாக சமூகத்தில் மிகவும் முரணான நிலை தோன்றியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்களிற்காக காத்திருக்கும் மக்களிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ள விடயம் மிகவும் பாரதூரமானது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாலித ரங்க பண்டாரவின் இந்த அறிவிப்பிற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள இலங்கையின் சிவில் சமூக பிரதிநிதிகள், தேர்தல் ஆணையாளரை அமெரிக்க தூதுவர் சந்தித்துள்ளமை மிக முக்கியமானது இலங்கையின் ஜனநாயகம் குறித்து நம்பகதன்மைமிக்க பேச்சுகள் இடம்பெற்றதாக பொதுமக்கள் கருதுகின்றனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐநாவும் இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் மன்னிப்பு கோரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கவேண்டும். ஜனநாயகம் தொடர்பில் இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை தடுப்பதற்காக தலையீடு செய்யவேண்டும் எனவும் தங்கள் கடிதத்தில் சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.(05)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இருவரது சடலங்கள் நேற்று மீட்பு

காலி, தவலம பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச்செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்த இரண்டு நபர்களும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

23 மற்றும் 53 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக தவலம பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது இவர்கள் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# மோ. சைக்கிளில் வந்தோர் தங்க நகைகள் கொள்ளை

## திம்புள்ள பத்தனையில் சம்பவம்



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனி வீடொன்றில் இரண்டுபெண்களின்தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் நகரசபை ஊழியர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த இருவர் வீட்டில் இருந்த பெண்கள் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு தங்கசங்கிலிகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

குறித்த வீட்டில் தனிமையில் இருந்த 80 வயதான வயோதிபப் பெண்ணும் , 35 வயதுடைய பெண்ணும் இருந்த நேரத்தில் மோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் நகரசபை ஊழியர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தவர்கள் எட்டு லட்சம் ரூபா பெறுமதியுடைய இரண்டு தங்க சங்கிலிகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, இரு பெண்களும் சத்தமிட அங்கு வந்த அயலவர்களின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிய கொள்ளையர்கள் சென்ற வீதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமரா காட்சிகளின் ஊடாக மோட்டார் சைக்கிளின் பதிவு இலக்கத்தின்

# இரு வாரங்களில் 24 உயிரழப்புகள் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டன

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இரத்தினபுரி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அதிகளவான மரணங்களும் பதிவாகியுள்ளன.

முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் 9 மரணங்கள் பதிவாகியிருந்த நிலையில் திங்கட்கிழமை காலை 6 மணி வரை அந்த எண்ணிக்கை 16ஆக உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய 3 தினங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் 5 மரணங்களும், கொழும்பில் 3 மரணங்களும், மாத்தறையில் 6 மரணங்களும், காலியில் இரு மரணங்களும் பதிவாகியுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் மே மாதம் 15ஆம் திகதி முதல் கடந்த முதலாம் திகதி வரையான இரண்டு வாரங்களில் மாத்திரம் மரம் முறிந்து விழுந்தமையால் காலி, இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலி, இமதுவ பிரதேசத்தில் மே 21ஆம் திகதி 40 வயதுடைய ஒருவரும், இரத்தினபுரி - பலாங்கொடையில் 22ஆம் திகதி 40 வயதுடைய ஒருவரும், 28ஆம் திகதி கொடகவெல பிரதேசத்தில் 50 வயதுடையஒருவரும் மரம் முறிந்து விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இதேபோன்று புத்தளத்தில் மே 22ஆம் திகதி மாதம்பே பிரதேசத்தில் 39வயதுடைய பெண்ணொருவரும், நாத்தாண்டியா பிரதேசத்தில் 36 வயதுடைய பெண்ணொருவரும், 23ஆம் திகதி ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் 22 வயதுடைய பெண்ணொருவரும் மரம் முறிந்து விழுந்து உயிரிழந்துள்ளனர்.

நுவரெலியாவில் மே 23ஆம் திகதி வலப்பன பிரதேசத்தில் 38 வயதுடைய ஆணொருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளார். பதுளையில் மே 25ஆம் திகதி அப்புதளையை சேர்ந்த 65 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளார். அதற்கமைய இயற்கை அனர்த்தங்களால் கடந்த இருவாரங்களில் 16 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை



ஐக்கியநாடுகள்சபையின்நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்ததுடன் பல்வேறுபட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டார்.



நல்லை ஆதீனத்துக்குச் சென்ற ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரம்மாச்சார்யசுவாமிகளைசந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவிதேவஸ்தானதலைவர் கலாநிதிஆறுதிருமுருகன், கோப்பாய் சுப்பிரமணியகோட்டத்தின்தலைவர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கலந்துகொண்டார்கள்.

அதனை தொடர்ந்து, நல்லூர் கந்தசுவாமி கோவிலும் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு சென்று, பார்வையிட்டதுடன் கலந்துரையாடல்களிலும்ஈடுபட்டார்.

மேலும், இந்தியா - இலங்கை இடையேயானபாக்குநீரிணையை கடந்த சிறுவன் தன்வந்தை சந்தித்து பாராட்டுகளையும்தெரிவித்தார். (05)

## உதரட்ட மெனிகே ரயில் இயந்திரம் திடீரென நேற்று பகல் தீப்பிடித்தது



இருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட மெனிகே கடுகதி ரயிலின் இயந்திரத்தில் நேற்று (திங்கட்கிழமை) பகல் வேளையில் திடீரென தீப்பிடித்துள்ளது.

ஹப்புத்தளைரயில்நிலையத்தில் வைத்தேரயிலின்பின்பக்கத்திலுள்ள இயந்திரத்தில் தீப்பிடித்துள்ளது.

ஹப்புத்தளை ரயில் நிலைய ஊழியர்கள் மற்றும் பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (05)

## சீமெந்தின் விலை குறைவடைந்தது

50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து பொதியின் விலையை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சீமெந்து நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இந்த விலை குறைப்பானது ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து பொதியின் புதிய விலை 2,250 ரூபாவாகும். (05)




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!